தாந்தோணி பேரூராட்சிக்குக் குடிநீர் வசதி.

*215 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாந்தோணி பேரூராட்சிப் பகுதியில் உள்ள ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14—9—1971-ல் தாந்தோணி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் ஆய்வு மதிப்பீடு ரூபாய் 14,000-க்கு நிர்வாக ஒப்புதல் அளித்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் தாந்தோணி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தாந்தோணி மிகமிகப் பின்தங்கிய பகுதி. ஆகவே, இதுபோன்ற பின்தங்கிய பகுதிக்கு முக்கியத் துவம் கொடுத்து இந்தத் திட்டத்தை விரைவாக முடித்துக்கொடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பின்தங்கிய பகுதி என்ற காரணத் தினல் தான் ஆய்வு மதிப்பீட்டுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சி ஆய்வு மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தியவுடன் அந்த வேலை கள் மேற்கொள்ளப்படும்.

திரைப்படத் தொழில் நுட்பக்கல்வி.

*216 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமாத்துறை தொழில் நுட்பக் கல்விப் பகுதி ஒன்றை சென்னை யில் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) திரைப்படத் தொழில் நுட்ப வியல் நிறுவனம் எனுமோர் அரசு நிறுவனம் ஏற்கனவே செயற்பட்டு வரு கின்றது.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன் : பூனவில் உள்ளதுபோல இங்கேயும் நடிப்புத் தொழில் கற்றுக்கொடுக்க ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நிறுவனத்தில் நடிப்புப் பயிற்சி கற்றுத் தரப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதனுடன் சர்க்காரே ஒரு ஸ்டுடியோ கட்டி யிருக்கிறீர்களே, அதை விரிவுபடுத்தி சர்க்காரின் செலவில் சோவியத் யூனியனில் லிபரேஷன் படங்கள் எடுக்கப்பட்டிருப்பதுபோல நம்முடைய சிறப்பான விடுதலைப் போராட்டங்களையும் படங்களாக எடுக்க முன்வரு வார்களா ?